2024 ஜூன் 21]

எனவே, அந்தக் கேள்வியையே நான் மனுவாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, அங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா, நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைக்க முடியுமா அல்லது ஒன்றியத்தின்மூலம் அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நெடுஞ்சாலைத் துறைமூலம்தான் அமைக்க முடியும் என்று சொன்னால், இந்த ஆண்டே அதற்கான திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு அரசின் சார்பாக ஆணையிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை உள் வட்டச் சாலை என்று சொல்லப்படுகிற* Ring Road*-ல் இராமேஸ்வரம் சந்திப்பில் வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. திருவிழாக் காலங்கள் மற்றும் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற நேரங்களில் ஒரு வாகனம் செல்ல வேண்டுமென்றால், 20 நிமிடங்கள் ஆகின்றன. எனவே, அந்தச் சந்திப்பில் ஓர் உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக மாமதுரை என்று சொல்லப்படுகின்ற தமிழ் வளர்த்த மதுரைக்கு எந்தவொரு திட்டமும் நடைபெறாமல் இருந்த சூழ்நிலையில், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேதான், அங்கே பல்வேறு பாலப் பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் துவக்கப்பட்டு, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது அப்பல்லோ மருத்துவமனை பாலமாக இருந்தாலும் அல்லது கோரிப்பாளையம் பாலமாக இருந்தாலும், இப்படி இரண்டு பாலங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்*

திருக்கரங்களால் துவக்கப்பட்டு, பாலப் பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பாலப் பணிகளெல்லாம் முடிந்த பிறகு, போக்குவரத்துச் செறிவு இருக்குமேயானால், அவர் சொல்கின்ற பாலத்தையும் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்கும் முன்னுரிமை அளிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

52—

சார்பு நீதிமன்றம்

***7819—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாய் தாலுகா, விளவங்கோடு தாய் தாலுகா ஆகிய இரண்டு தாலுகாக்களிலிருந்து பிரித்து 2–9–2019 அன்று புதிதாக தாலுகாக்கள் உருவாக்கப்பட்டன. இன்றைக்கு திருவட்டார் தாலுகாவிற்கு புதிய நீதிமன்றத்தைக் கேட்கிறோம்.

2024 ஜூன் 21]

ஏன் நீதிமன்றத்தைக் கேட்கிறோம் என்று சொன்னால், திருவட்டார் பகுதியைப் பொறுத்தளவில், மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். பேச்சிப்பாறை, குத்தியாறு, பாலாறு அருகிலுள்ள மலைக் கிராமங்களில் இருக்கின்ற மக்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி என்ன என்பதை மட்டும் கேட்கவும்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைத்தான் கேட்கிறேன். அதனை ஒழுங்காகச் சொன்னால்தான், அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த மாவட்டம் முழுவதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள், அவர்கள் புரிந்துகொள்வார்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷயத்தைத்தான் சொல்கிறேன். ஆகையால் அந்த மக்களெல்லாம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதானே கேள்வி.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மக்களெல்லாம் படகுகள் மூலமாக 30 கிலோ மீட்டர் பயணம் செய்துதான் நீதிமன்றத்தைத் தேடி வரக்கூடிய ஒரு சூழல் இன்றைக்கு இருக்கிறது. அதேபோல் அங்கேயிருக்கிற* police station*–ஐ பார்த்தோமென்றால், பேச்சிப்பாறை, திருவட்டார், குலசேகரப்பட்டினம் என்று 3* police stations *இருக்கின்றன. இதிலுள்ள வழக்குகள் எல்லாம் இன்றைக்கு மிகவும் தேக்க நிலையில் இருக்கின்றன. ஆகையால்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டார் தாலுகாவிற்கும், கிள்ளியூர் தாலுகாவிற்கும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக்கொண்டு வருகிறோம். நிச்சயமாக இந்த மானியக் கோரிக்கை மீதான கூட்டத் தொடரிலேயே அந்த நீதிமன்றத்தை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2024 ஜூன் 21*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாரில் உரிமையியல் நீதிமன்றமோ, குற்றவியல் நீதிமன்றமோ இல்லை. அப்படியிருக்கின்றபோது சார்பு நீதிமன்றம் என்கின்ற வினா எழுவதற்கான வாய்ப்பே அங்கே கிடையாது. ஆகவே, முதலில் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் வந்தாக வேண்டும். திருவட்டாரைப் பொறுத்தவரைக்கும், அங்கே சார்பு நீதிமன்றம் வர வேண்டுமென்று சொன்னால், பத்மநாபபுரத்திலிருக்கக்கூடிய நீதிமன்றத்திலே திருவட்டார் பகுதியில் இருக்கக்கூடிய 100 வழக்குகள்தான் தேக்க நிலையில் இருக்கின்றன. எனவே, சார்பு நீதிமன்றம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு என்பது தற்போது நிச்சயமாகக் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு குற்றவியல் நீதிமன்றமோ, உரிமையியல் நீதிமன்றமோ அல்லது* Munsif-cum-Judicial Magistrate Court-*ஓ வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் சொல்லியிருக்கின்றார். அது ஆரம்பக் கட்டம். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியோடு அதனைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள், நன்றி சொல்லுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல நம்முடைய பத்மநாபபுரம் நீதிமன்றத்தில்* Mahila Court, *குடும்ப நல நீதிமன்றம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, சென்னை உயர் நீதிமன்றத்தால் அதற்கான கருத்துரு பெறப்பட்டு, இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது. அந்தக் குடும்ப நல நீதிமன்றத்தையும் உடனடியாக வழங்குமாறு நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

2024 ஜூன் 21]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, உயர் நீதிமன்றம் எங்களுக்கு அனுப்பியிருக்கிறது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள், எடுத்து முடிவுகள் அறிவிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்கு அரசின்மூலம் நீதிமன்றம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான தற்காலிக இடம் கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு, நான்கு மாதங்களுக்கு முன்பே கருத்துரு மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், அது உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதி பெற்று அமைக்கப்படுவதற்கு காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அனுமதியை விரைவிலே பெற்று, கீழ்பெண்ணாத்தூரிலே நீதிமன்றம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா? அந்த நீதிமன்றத்திற்குத் தேவையான இட வசதிகள் உள்ளன. எனவே, புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? பல்வேறு நீதிமன்றங்களிலே நீதிபதிகள் இல்லாமல் பல வழக்குகள் தாமதமாகின்றன என்ற நிலை எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிறது. ஆகவே, காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு, உயர் நீதிமன்றத்தினுடைய ஆலோசனையின்படி உரிய நடவடிக்கைகள் எடுத்து பல பணியிடங்கள் இன்றைக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*

கீழ்பெண்ணாத்தூரைப் பொறுத்தவரைக்கும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பொறுப்பு நீதியரசர்களாக இருக்கக்கூடிய உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களோடும், மாவட்ட நீதிபதிகளினுடைய பரிந்துரைகளோடும், எவ்வளவு விரைவிலே கீழ்பெண்ணாத்தூரிலே Munsif–cum–Judicial Magistrate Court கொண்டுவர முடியுமோ, அதைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில் தேன்கனிக்கோட்டை தாலுகாவை 2019 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டியை மையமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்கப்பட்டது. அஞ்செட்டி தாலுகாவில் அதாவது உரிகம், கோட்டையூர், மஞ்சுகொண்டபள்ளி மலைக் கிராமங்களிலிருந்து நீதிமன்றத்திற்கு வரவேண்டுமென்றால், தேன்கனிக்கோட்டைக்கு வர வேண்டும். ஆகவே, புதிதாக உருவாக்கப்பட்ட அஞ்செட்டியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தை, அதாவது, Magistrate Court–ஐ உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம், அதாவது, Munsif–cum–Judicial Magistrate Court கொண்டுவர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய விருப்பம் ஆகும். ஏனென்று சொன்னால், மக்களை அலைக்கழிக்கக் கூடாது. அவர்களுக்கு அருகிலேயே நீதி கிடைக்க வேண்டுமென்பதற்கான ஏற்பாடுகளைத்தான் இன்றைக்கு செய்து வருகின்றோம். எனவே, நிதித் துறையினுடைய ஒப்புதலோடு எந்தளவுக்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அந்தளவுக்கு நிச்சயமாக அங்கே

2024 ஜூன் 21]
Munsif-cum-Judicial Magistrate Court-ஐ கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்தியாவே தமிழகத்தை உற்றுப்பார்க்கின்ற வகையில் 40-க்கு 40-ஐ வென்றெடுத்த மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு பணியாற்றிய தோழமையையும் இந்த மாமன்றம் பாராட்டி, வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறது.

மாண்பிற்கினிய பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் நம்முடைய மரியாதைக்குரிய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி தருவதாகச் சொன்னார்கள். திருச்சியில் ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. தஞ்சையில் ஒரு தனியார் சட்டக் கல்லூரி இருக்கிறது. கும்பகோணம் மாவட்ட தலைநகரமாக ஆக்கப்படுவதற்கான வாய்ப்பினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் கும்பகோணத்தில் சட்டக் கல்லூரி அமைத்துத் தரப்படுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைத்துத் தருவதாக நாங்கள் எந்தவிதமான வாக்குறுதியும் தரவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கின்றேன். ஒரு சட்டக் கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், 100 கோடி ரூபாய்க்குமேல் இன்றைக்கு அரசிற்கு செலவாகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சட்டக் கல்லூரியை உருவாக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணம் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்தாலும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான

தொகைகள் இன்றைக்கு இல்லாத காரணத்தாலேதான், அது தாமதப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக நிதித் துறை எந்தளவுக்கு எங்களுக்கு ஒத்துழைப்பு தருகிறதோ, அந்தளவுக்கு அரசு சட்டக் கல்லூரிகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள்ளாக குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பது அங்கு இருக்கக்கூடிய பெண் வழக்கறிஞர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் நான் அதை கொடுக்கப்போகும்போதுகூட நீதிமன்ற வளாகத்திற்குள் இதுமாதிரி செய்ய முடியாது என்று மாவட்ட நீதிபதி அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதனால் நாங்கள் நிதி கொடுப்பதற்கு முன்வந்தால்கூட, அங்கு இதுமாதிரி தடை இருப்பதால் அந்தக் காப்பகத்தை அமைக்க முடியவில்லை. இன்றைக்கு நிறைய பெண் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு வந்துகொண்டு இருக்கிறார்கள். அதனால், குழந்தைகள் காப்பகம் அங்கு அமைக்கப்பட முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைத் தந்தால் நிச்சயமாக உயர் நீதிமன்றத்திலே சொல்லி, உடனடியாக அங்கே குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயமாக மேற்கொள்வோம். எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ, அதை உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியோடு செய்து தருவோம்.*

TRUTH ALONE TRIUMPHS

2024 ஜூன் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்ட மாவட்டம். தற்போதுதான் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலே கூடுதலாக ஒரு மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அந்த மாவட்டத்திற்காக பொறுப்பிலிருக்கக்கூடிய உயர் நீதிமன்ற நீதிபதி மற்றும் அந்த மாவட்ட நீதிபதி ஆகியோரால் உயர் நீதிமன்றத்திற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டால் அந்த பரிந்துரையின் அடிப்படையிலே அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம், பேரவைத் தலைவரிடமிருந்து ஒரு கேள்வி இருக்கிறது. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், தாங்களும் திசையன்விளை தாலுகா, திசையன்விளையில் ஒரு Munsif-cum-Judicial Magistrate Court அமைக்க அரசாணை வெளியிட்டிருக்கிறீர்கள். எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மானாமதுரையில் நடைபெற்ற combined court building திறப்பு விழா நிகழ்ச்சியிலே அங்கிருக்கக்கூடிய நீதியரசர்களிடத்திலே எங்களுடைய சட்டப் பேரவைத் தலைவர், எங்கள் துறை சார்ந்த மானியக் கோரிக்கை வரும்பொழுது அதைக் கேட்பார்கள் என்ற செய்தியை